அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே மீண்டும் இதைப் பரிசீலனை செய்து, தயவுசெய்து அங்கே ஒரு கோர்ட்டு ஏற்படுத்த முயற்சி எடுத்துக்கொள்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கோர்ட்டு எங்கே இருந்தாலும் வக்கீல்களுக்கு குந்தகம் ஏற்படாது. அதைப் பற்றி அவர்களுக்கு கவலையில்லை. ஹைகோர்ட்டுதான் இதைக் கவனிக்க வேண்டும். அதை அரசாங்கம் பரிசீலனை செய்து, அவர்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டது. குடியாத்தம் தாலுக்காவுக்கு மட்டும் ஒரு முன்சிப் கோர்ட்டு வேண்டியதில்லை என்றுதான் ஹைகோர்ட்டும் கருதுகிறது. அரசாங்கமும் அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

SRI A. GOVINDASAMY: கனம் தலைவர் அவர்களே, கோர்ட்டு எங்கேயிருந்தாலும், வக்கீல்களை பாதிக்காது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், கட்சியில் சம்பந்தப்பட்டுள்ள ஜனங்கள் கோர்ட்டுக்குச் செல்லுவதில் பாதிக்கப்படுவார்கள் என்று அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஒவ்வொரு கிராமத்திலும் கோர்ட்டு ஏற்படுத்த முடியாது. கொஞ்சம் தூரமாக இருந்தால், வழக்கில் மக்கள் தொடர்பு வைத்துக் கொள்ளும் மனப்பான்மை வளருவது குறையும்.

Veterinary Hospitals

*296 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குடியாத்தம் தாலுகாவில் கீழ்க்கண்ட ஊர்களில் கால்நடை ஆஸ்பத்திரிகள் ஆரம்பிக்க உத்தேசமுண்டா?

1. பேர்ணும்பட்டு;
2. பரதராமி;
3. காட்பாடி;
4. திருவலம்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

SRI V. K. KOTHANDARAMAN: ஸார், பேர்ணும்பட்டு, பரதராமி, திருவலம் போன்ற கிராமங்களிலுள்ள விவசாயிகள் கால்நடை வைத்தியத்திற்காக 10, 12 மைல்களுக்கு அப்பால் போகவேண்டியிருக்கிறது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரிந்த விஷயம். அதை முன்னிட்டாவது கனம் அமைச்சர் அவர்கள் உடனடியாக ஆங்காங்கே கால்நடை ஆஸ்பத்திரிகளை எப்படியாவது ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

18th February 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தத் தாலுகா காவில் ஏராளமான கால்நடை வைத்தியசாலைகள் வைக்கப் பட்டிருக்கின்றன. ஆனால், புதிதாக வைப்பதற்கு இப்போது யோசனையில்லை என்றுதான் நான் சொன்னேன். வட்டார வளர்ச்சித் திட்டங்கள் மூலமாகவும் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

SRI A. A. RASHEED : இந்தக் கால்நடை ஆஸ்பத்திரிகளுக்கு விவசாயிகள் வருகின்றனரா அல்லது கால்நடைகள் வருகின்றனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் தன்னுடைய தொகுதிக்குச் சென்று அங்குள்ள கால் நடை ஆஸ்பத்திரிகளில் யார் வருகிறார்கள் என்று பார்த்தால், தெரிந்து கொள்ளலாம்.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : Sir, there is dearth of personnel in the Veterinary Department to man these dispensaries; so, will the Government take this factor also into consideration before starting these dispensaries? or, there is no point in starting them without the necessary technical personnel to run them.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir; Government do take all that into consideration. As the hon. Member is aware, we have organized the Stockmen Course to give training through a short-term course. They are also fitted into these centres.

SRI A. A. RASHEED : Sir, on a point of personal explanation. Peranambattu is not my constituency and therefore I do not visit.

MR. SPEAKER : That is all right.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I did not say, Sir, ' he did not go ', but I said, ' let him go '.

SRI S. SADASIVAM : கீ வில்லேஜ் சென்டர் ஆரம்பிக்கப் பட்டிருக்கும் இடங்களில் கால்நடை ஆஸ்பத்திரிகளை தொடர்ந்து சேர்த்து ஆரம்பிக்க திட்டம் உண்டா ?

MR. SPEAKER : இதற்குத் தனியாக கேள்வி போடவேண்டும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுபற்றி அவ்வப் போது பரிசிலனை செய்யப்பட்டு, தேவைப்படி நிறைவேற்றப்பட்டு வருகிறது.

Southern Zonal Council

*** 321 Q.**—SRI S. M. ANNAMALAI : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதில ளிப்பாரா—

1960-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17-ம் தேதி பாண்டிச்சேரியில் நடந்த தென் மண்டலக் கவுன்சிலில் Power Development Commitee நடைபெற்ற விஷயங்கள் யாவை ?